OS: 1/2022

Date: 12.11.2025

பெயர் : கந்தசாமி **(வா.சா.1) ஆஜர்**, **சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–</u>**

1. எனது சகோதரிகள் எனக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறார்களா என்றால் ஆமாம். யார் யார் எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்றால் எனது அண்ணன் சின்னதம்பி, மற்றும் எனது சகோதரிகளான சின்னதாயி, பழனியம்மாள், பெருமாயி, கந்தம்மாள் ஆகியோர்கள் எழுதி கொடுத்திருக்கிறார்கள்.

2. அவர்கள் எழுதி கொடுத்த விடுதலை பத்திரத்தில் என்ன வாசகம் சொல்லியிருக்கிறார்கள் என்றால் எனது சகோதர, சகோதரிகள் அனைவரும் அவர்களுடைய பாகத்தை எனக்கு எழுதி கொடுப்பதாக கூறியிருக்கிறார்கள். அந்த விடுதலை பத்திரம் உண்மையா அல்லது பொய்யா என்றால் உண்மைதான். அந்த விடுதலை பத்திரம் எனது பெயருக்கு எழுதப்பட்டது என்றால் ஆமாம்.

3. விடுதலை பத்திரத்தில் கண்ட சொத்திற்கு நான் வழக்கு போடவில்லை என்றால் ஆமாம். எனக்கு எழுதி கொடுத்த விடுதலை பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது, படிக்க தெரிந்தவர்கள் படித்து சொன்னார்கள். என்ன சர்வே எண்ணை பொறுத்து எனக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் எனக்கு சர்வே எண் தெரியாது.

4. நான் வழக்கு தாக்கல் செய்த பின்னரும் சாட்சி அளிக்கும் வரும்வரை என்ன சர்வே எண்ணில் உள்ள சொத்திற்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது என்று தெரிந்து கொள்ள முயற்சி எடுக்கவில்லை

என்றால் சரிதான். விடுதலை பத்திரம் 2020 ஆண்டு எழுதப்பட்டது என்றால் எனக்கு வருடம் தெரியாது. நான் இந்த வழக்கை 2022ம் ஆண்டு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம்.

5. நான் இந்த வழக்கில் 2020 ம் ஆண்டு எனது சகோதர, சகோதரிகள் எழுதி கொடுத்த விடுதலை பத்திரம் குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது சகோதர, சகோதரிகள் எழுதி கொடுத்த விடுதலை பத்திரத்தில் அவர்கள் தங்களுக்கான பாகத்திற்கான பணத்தை பெற்றுக்கொண்டு தங்களது பாகத்தை விடுதலை செய்துகொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள் என்றால் இல்லை.

6. ஒரு சொத்தை தான் விடுதலை செய்து கொடுத்தார்கள். எனக்கு எந்த சொத்தை விடுதலை செய்து கொடுத்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் ஆமாம். எனக்கு படிப்பறிவு இல்லை. அதனால்தான் வழக்குரையில் அதனை சொல்லவில்லை என்றால் ஆமாம். எனக்கு யார் விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார்களோ அவர்களும், நானும் சேர்ந்து இந்த 2ம் பிரதிவாதி மீது வழக்கு போட்டிருக்கிறோம் என்றால் ஆமாம்.

7. எனக்கு 2020ம் ஆண்டு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துவிட்டு, அதே சொத்தை பொறுத்து மீண்டும் விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தவர்களால் பாகப்பிரிவினை கோரமுடியாது என்றால் சரியல்ல. 2020ம் ஆண்டு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துவிட்டு 2022ம் ஆண்டு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி சரியானதல்ல என்றால் சரியல்ல.

8. மேற்கண்ட ஒரே காரணத்திற்காகவே நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நானும், எனது சகோதர, சகோதரிகளும் பாகம் பிரிக்காமல் கூட்டுசுவாதீனத்தில் இருந்து

வருவதாகதான் வழக்கில் சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். நான் எங்கு குடியிருக்கிறேன், எனது சகோதர, சகோதரிகள் எங்குயிருக்கிறார்கள் என்றால் நான் தாத்தா சொத்தில் குடியிருக்கிறேன். எனது சகோதரிகள் அவர்கள் வீட்டில் குடியிருக்கிறார்கள். வழக்கு சொத்தில் எனது சகோதரிகள் குடியில்லை என்றால் ஆமாம். யாருமே வழக்கு சொத்தில் குடியில்லை.

9. எனது தாத்தா சொத்து எந்த ஊரில் இருக்கிறது என்றால் ராமரெட்டிப்பட்டி, துட்டம்பட்டியான் வளவில் இருக்கிறது. எனது தாத்தா பெயரில் இருக்கும் சொத்தில் என்ன வீடுகட்டி குடியிருக்கிறேன் என்றால் ஓட்டு வீடும், மெத்தை வீடும் கட்டியிருக்கிறேன். மொத்தம் எத்தனை வீடு இருக்கிறது என்றால் 17 வீடுகள் இருக்கிறது. எனது சித்தப்பன்மார்களும், எதிர்பாட்டியும் வீடு கட்டி குடியிருக்கிறார்கள்.

10. 5 பேர் அங்கு வீடுகட்டி குடியிருக்கிறார்கள். எனக்கு என்ன தொழில் என்றால் ஆடு, மாடு மேய்க்கிறேன். விவசாயமா என்றால் இல்லை குறையாக இருக்கிறது. எவ்வளவு நாட்களாக குறையாக உள்ளது என்றால் 5 வருடமாக உள்ளது. 5 வருடத்திற்கு முன்னர் வழக்கு சொத்தில் இருந்து வருமானம் வந்தது என்றால் ஆமாம். வழக்கு சொத்தில் வந்த வருமானத்தை வைத்துதான் வீடு கட்டினேன் என்றால் இல்லை. எனது மகன்கள் கூலி வேலைக்கு செல்கிறார்கள். அந்த வருமானத்தை வைத்துதான் கட்டினேன்.

11. எனது மகன்கள் கூலி வேலை செய்து சம்பாதித்த பணத்தில்தான் வீடு கட்டினேன் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எத்தனை வருடமாக நான் அந்த வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் வில்லை வீட்டில் 40 வருடமாக

குடியிருக்கிறேன், மெத்தை வீட்டில் 10 வருடமாக குடியிருக்கிறேன். எனக்கு எத்தனை மகன்கள் என்றால் பழனிசாமி, மாணிக்கம் என்ற 2 மகன்கள். எனது மகன்களை படிக்கவைத்திருக்கிறேனா என்றால் இல்லை.

12. எனது மகன்கள் எந்த வருடம் பிறந்தார்கள்என்றால் எனக்கு தெரியாது. எனது மகன்களுக்கு என்ன வயது என்றால் பெரிய மகனுக்கு 40 வயது இருக்கும் (1, 2 வயது குறைவாக கூடஇருக்கலாம்) எனது சின்ன மகனுக்கு 35 வயது இருக்கலாம் (1, 2 வயது குறைவாக கூடஇருக்கலாம்). எனது பெரிய மகன் குழந்தையாக இருந்தபோதும், சின்ன மகன் பிறப்பதற்கு முன்பும் வில்லை வீடு கட்டப்பட்டது என்றால் ஆமாம்.

13. எனது மகனின் சம்பாத்தியத்தில் இருந்து வீடு கட்டியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல, மெத்தைவீடு தான் எனது மகன்களின் வருமானத்தில் கட்டப்பட்டது. வில்லை வீடு அவர்கள் பிறப்பதற்கு முன்பு எனது வருமானத்தில் கட்டப்பட்டது. மேற்படி இரண்டு வீடுகளையும், வழக்கு சொத்தில் பாகம் பிரித்துதரச்சொல்லி காட்டியிருக்கிறேனா என்றால் இல்லை. அது எனது சொத்து எனவே அதனை காட்டவில்லை. கூட்டுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட முழு சொத்துக்களையும் இந்த தாவாவில் காட்டாததால் இந்த தாவா தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

14. எனது சாட்சியத்தில் இருந்தே எனது வீடுகள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்று தெரியவருவதால் அதை பாகம் பிரித்து தரக்கோரமல் இந்த பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு பகுதி பாகப்பிரிவினை தோசத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. நான் என் அப்பா, அம்மா சொத்தை தான் பாகம் பிரித்துதரச்

சொல்லி கேட்கிறேன். பாட்டன் சொத்தை கேட்கவில்லை.

15. அந்த சொத்து எனது பாட்டனுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அவர்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து நான் ஆவணம் எடுக்கமுடியாது. எனது சாட்சியமே மேற்படி இரண்டு வீடுகளும் பாகப்பிரிவினைக்கு உட்பட்ட சொத்து என்பதை நிரூபிக்கிறது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.